[2003 ஏப்ரல் 7

செல்வி சி. கனகதாரா: வேலையில்லாப் பட்டதாரிகளும், படித்த இளைஞர்களும் வேலையின்றித் தவித்து வருகின்றனர். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உழைப்பவர் உயர்ந்தால்தான் உலகம் ஏற்றம் பெறும் என்ற உரிமைக் குரலை உறுதியாக எழுப்பியவர் பாவேந்தர் அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.

செல்வி சி. கனகதாரா: புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலம் தொழில் முன்னேற்றத்தைக் காட்டி வரும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே இதனை மறுபரிசீலனை செய்து, பேரணாம்பட்டு தொகுதியில் ஒரு தொழிற்பேட்டையை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு தொகுதியில் போதுமான தொழில் முனைவோர் முன்வராத காரணத்தால், தற்சமயம் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் சிட்கோவிடம் இல்லை. மேலும், பேரணாம்பட்டு தொகுதியில் போதுமான தொழில் முனைவோர் வந்தால், தொழிற்பேட்டை ஆரம்பிக்கத் தகுந்த இடம் கிடைக்குமானால், சிட்கோ தொழிற்பேட்டையை வருங்காலத்தில் அமைக்க சிட்கோ நிறுவனத்தால் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினருக்கு ஒரு பணிவான வேண்டுகோள். கேள்வி நேரத்தில் எந்தவிதமான குற்றச்சாட்டும் ஒரு உறுப்பினர் மீது கூறக்கூடாது.

வினா எண் 189, திருமதி செ. சுந்தராம்பாள், மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

189—

துணை மின் நிலையம்

•22851—திருமதி செ. சுந்தராம்பாள்:

மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2003 ஏப்ரல் 7]

மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியத்தில் 33 கி.வோ. துணை மின் நிலையத்தை 110 கி.வோ. மின் நிலையமாக அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தொழில்நுட்ப ரீதியாக கொளத்தூர் 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தை 110 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டிய அவசியம் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி செ. சுந்தராம்பாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஒட்டுமொத்த விவசாயிகளின் நலனுக்காக 350 கோடி ரூபாய் ஒதுக்கிக் கொடுத்த, தமிழகத்தின் நிரந்தர முதல்வர், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 33 கே.வி. துணை மின் நிலையத்தை 110 கே.வி. துணை மின் நிலையமாக அமைக்கத் தேவையில்லை என்று கூறியுள்ளார்கள். கொளத்தூர் ஒன்றியம் முழுவதும் விவசாயப் பெருங்குடி மக்கள் நிறைந்த பகுதி. அங்கே அவர்களின் மின் மோட்டார்களுக்கு மின்சாரம் மிகக் குறைவாகக் கிடைக்கின்ற காரணத்தால், மின் மோட்டார்கள் அடிக்கடி ரிப்பேர் ஆகி, அவர்களுக்குப் பெருத்த செலவு ஏற்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, 33 கே.வி. துணை மின் நிலையத்தை 110 கே.வி. மின் நிலையமாக மாற்றுவதற்கு முயற்சி எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் 33 கே.வி. துணை மின் நிலையம் 2x5 எம்.வி.ஏ. திறன் மின் மாற்றி மூலம் தற்போது இயக்கத்தில் இருந்து வருகிறது. இதன் உச்சக்கட்ட மின் பளு இதுவரை 9.4 எம்.வி.ஏ.வை எட்டியுள்ளது. வரும் ஆண்டிற்கான கூடுதல் மின் பளுவினைக் கணக்கில் கொண்டு, ஏற்கெனவே உள்ள 2x5 எம்.வி.ஏ. திறன் மின் மாற்றிகளுக்குப் பதிலாக 2x8 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின் மாற்றிகளாக உயர்த்துவதற்கான செயற்குறிப்பு 10-வது பெருந்திட்டம் பகுதி 1-ல் 2002-2003 ஆம் ஆண்டில் பணி முடிக்கத் திட்டமிடப்பட்டது. ஆனால், பணி முடிக்கப்படவில்லை. இருப்பினும், இந்த நடப்பாண்டில், 2003-2004-ல், இதற்கான நிதி ஒதுக்கீடு செய்ய

நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்த ஆண்டிலேயே பணி முடிக்க ஏற்பாடுகள் செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் ஒன்றியம், முழுக்க, முழுக்க விவசாயிகளைக் கொண்ட பகுதி. எவ்விதத் தொழில் வசதிகளும் இல்லாத பகுதி. இங்கே அந்த பூகோளச் சூழ்நிலைகூட--இடையிடையே மலைப் பகுதியிலிருந்து, அங்கே கண்ணாமூச்சி என்ற பகுதி, ஒரு பகுதியாகவும், தார்க்காடு, தண்டாவூர், ஒரு பகுதியாகவும், காவேரிபுரம் ஒரு பகுதியாகவும்--பல கூறுகளாக மாறுபட்டிருக்கிறது. அதற்கு மையப் பகுதி கொளத்தூராக இருந்தாலும்கூட, அந்த கொளத்தூரிலேயிருந்து மின் இணைப்புச் செல்கின்றபோது, அங்கே மின் அழுத்தக் குறைவு ஏற்படுகிறது; மின் வெட்டு ஏற்படுகிறது. விவசாயிகளும் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அதையெல்லாம் மையமாக வைத்து நம்முடைய அமைச்சர் அவர்கள் மின் மாற்றி அமைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, விவசாயிகளுடைய நலனைக் கருத்திலே கொண்டு--தார்க்காடு பகுதியிலே ஒரு துணை மின் நிலையம், காவேரிபுரம் பகுதியிலே ஒரு துணை மின் நிலையம், கண்ணாமூச்சி பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் என இப்படித்--துணை மின் நிலையங்களைக் கூடுதலாக அமைக்கின்றபோதுதான் அந்த விவசாயப் பெருமக்களுக்குப் பாதுகாப்பு ஏற்படும். அதைக் கருத்திலே கொண்டு, இந்த 33 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தை 110-ஆக உயர்த்துவதோடு, அந்தப் பகுதிகளுக்குத் துணை மின் நிலையங்கள் அமைத்துக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கின்ற 33 கே.வி. துணை மின் நிலையம் 2x5 என்பதற்குப் பதிலாகத்தான், அதாவது 33 கே.வி. 2x8 ஆக மாற்றியமைப்பதற்குத்தான் திட்டமிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், விவசாயிகளின் நலனைக் கருத்தில்*

கொண்டும், அந்தப் பகுதியில் இன்னும் துணை மின் நிலையம் தேவை என்பதைத் தொழில்நுட்ப ரீதியாக அறிந்து, ஆய்வு செய்து, தேவை ஏற்படின் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி செ. சுந்தராம்பாள்.

திருமதி செ. சுந்தராம்பாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 33 கே.வி. துணை மின் நிலையத்தை 110 கே.வி. துணை மின் நிலையமாக மாற்றும்போது அரசுக்கு ஏற்படும் செலவு என்பது எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 190, திரு. மே.ப. காமராஜ், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

190—

பணி நியமனம்

***8831—திரு. மே.ப. காமராஜ்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்குப் பணி நியமனம் செய்யும்போது, முழுவதும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் தகுதி வாய்ந்த பட்டதாரிப் பணியாளர்களைக் கொண்டு பணி நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?